# DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )
O.S.No.137/2019
****

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW1 |
| Name | : | முருகேசன் |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 30.09.2019 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

சாட்சி இன்றைய தினம் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, முதல் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

நான் வாதி. எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண ஆணை உறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண ஆணை உறுதி ஆவணம் எனது தகவலின் பேரில் தான் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 11.06.2000 ஆம் தேதியிட்ட பாகப் பிரிவினை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.1. 16.12.2006 ஆம் தேதியில் ராமசாமியும், ராமலிங்கமும் பிறப்பித்துக் கொண்ட பரிவர்த்தனை ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.2. ராமசாமி, சுந்தர்ராஜ்க்கு எழுதி வைத்த 07.07.2011 ஆம் தேதியிட்ட பதிவு கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ.3. 19.12.2018 ஆம் தேதியில் சுந்தர்ராஜ் என்பவர் எனக்கு எழுதி வைத்த கிரைய ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.4. நான் கதவு எண்.64, 64ஏ-க்கு சொத்து வரி செலுத்தியதை காட்டக்

கூடிய சொத்து வரி ரசீது 2 எண்ணம் வா.சா.ஆ.5 வரிசை. மின் இணைப்பு எண்.585க்கு செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது வா.சா.ஆ.6. தாவா 2 ஆம் தபசில் பொது முடுக்கைக் காட்டக் கூடிய புகைப்படங்கள் 2 எண்ணம். அவை என்னுடைய உத்தரவின் பேரில் தான் எடுக்கப்பட்டது. அந்தபுகைப்படங்கள் வா.சா.ஆ.7 வரிசை. தாவா சொத்துக்களை காட்டக் கூடிய பிராது பிளான் வா.சா.ஆ.8. பிராது படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.